விடுதலைப் போராளிகள்,மாவீரகள் குடும்பத்திலொரு பிள்ளையின் கல்வியை மேம்படுத்தும் திட்டம் -2018

விடுதலைப் போராட்டத்தில் கடுமையான பாதிப்புக்குள்ளாகி நலிவுற்றிருக்கும் முன்னைநாள் போராளிகளின் குடும்பங்கள் பல வறுமையில் வாடுகின்றன். இவர்கள் தமது அன்றாடம் சீவியத்திற்கே போதிய வருமானம் இன்றி கையேந்தும் நிலையில் இருப்பது நாம் எமது கடமையிலிருந்து தவறிவிட்டோம் என்பதையே காட்டிநிற்கிறது.

கனேடியத்தமிழர் அறக்கட்டளையானது 2016-17 ல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல பின் தங்கிய பிரதேசங்களில் இருக்கும் கல்வி வசதிகள் குறைந்த பாடசாலைகளில் கல்வி மேம்பாட்டிற்கான பல திட்டங்களை நிறைவேறியுள்ளதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அகில இலங்கை ரீதியாக நடைபெறும் 5ம் ஆண்டு புலமைப்பரிசு ஊக்குவிப்புத் திட்டம, GCE (O/L) – Gr 11 ஊக்குவிப்புத் திட்டம் என்பவற்றில் வடக்கிலும் கிழக்கிலுமாக சுமார் 3000 சிறார்கள் பயனடைந்தார்கள். இத்திட்டம் 2018 மேலும் விரிவுபட இருக்கிறது.

இத்திட்டங்களின் பயன்களை தெரிந்துகொண்ட முன்னைநாள் போராளிகள் பலர் தங்கள் குடும்ப நிலைகாரணமாக தமது பிள்ளைகளின் படிப்பு வீணாவதை விரும்பாததால் தமது குடும்பத்தில் இருந்து ஒரு பிள்ளைக்காவது கல்வி அறிவூட்டிவிடவேண்டுமென்ற நோக்கத்தில் எம்மை அணுகியுள்ளார்கள். எமது திட்டங்களையெல்லாம் வடிவமைத்து செயற்படுத்திய EDS அமைப்பு இதற்கான தகவல்களைளும் திரட்டி, அவற்றை கிராமசேவகர் ஊடாக உறுதிசெய்து எமக்கு முதற்கட்டமாக 15 குடும்பத்திலிருந்து 15 பிள்ளைகளின் விபரங்களை அனுப்பியுள்ளது.

இதில் 9 பேர் கிழக்குமாகாணத்திலும் 6 பேர் பூநகிரி மாவட்டத்திலும் இருந்து தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கு பாடசாலைக் கல்வியோடு நல்லொளுக்கம், பொதுச்சேவை, ஆங்கிலம் சுகாதாரம் என்பனவும் உணவு உடை என்பனவும் வழங்கி இவர்களை சமுதாயத்தில் பொறுப்புள்ளவர்களாக ஆக்குவதே இத்திட்டமாகும். ஒரு பிள்ளையை இவ்வாறு பராமரிக்க ஆண்டொனறிற்கு சுமார் C$ 750 – C$850 வரை தேவைப்படும். சராசரியாக Gr 6 ல் இருந்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 வருடத்திற்கு தொடர்ச்சியாக செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அன்புள்ளம் கொண்ட எம் உறவுகளே, இப்பிள்ளைகளின் அவல நிலைக்கு ஒருவிதத்தில் நாமும் காரணமாய் இருந்திருக்கக்கூடும். எவ்வாறாயினும் இச் சிறார்கள், எம் சொந்தங்கள். அவர்கள் நல் வாழ்வு பெற வழிவகுப்பது எமது வரலாற்றுக் கடமையாகும். சிறு துளி பெருவெள்ளம் என்பதால் இணைந்து செயற்பட முன்வாருங்கள்

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு எம்மைத் தொடர்புகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இன்றும் என்றும் ஒன்றாக வளர்ந்திடுவோம்

www.ctct.ca ctct.canada@gmail.com 437 886 5953 face book: